Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 199/2025** |
| Deposition of witness for | :: | **PW. 5** |
| Name | :: | **பிச்சைக்கனி** |
| Father's Name | :: | **வழிவிட்டான்** |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**20.05.2026**
**முதல் விசாரணை**:

1. நான் தற்போது வாழ்வாங்கியில் குடியிருந்து சமையல் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்திலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2025 ம் ஆண்டு இரவு சுமார் 09.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது பந்தல்குடி காவல் நிலையத்திலிருந்து போலீசார் சிவந்திநாதபுரம் காலனிக்கு வந்து டார்ச் அடித்து எனதுதம்பி கருப்பசாமியின் வீட்டை ஆய்வு செய்து கொண்டிருந்தார்கள். அப்போது நானும் உடன் இருந்து பார்த்தேன். ஆய்வின்போது போலீசார் இடத்தின் வரைபடத்தை வரைந்தார்கள். அதற்கு ஆதரவாக என்னை சாட்சி கையொப்பம் செய்ய சொன்னார்கள். நான் செய்து கொடுத்தேன். அப்போது என்னுடன் சேர்ந்து சுப்பிரமணியன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். நான் படிக்காத காரணத்தினால் அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் அதனை படித்து காண்பிக்கவில்லை. வரைபடம் வரைந்தது தொடர்பாக மேற்படி ஆவணத்தில் இருந்ததாக தெரியும். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் வெள்ளை பேப்பரில் கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன். நான் காவல் நிலையத்திற்கு சென்று கையொப்பம் செய்து கொடுத்தேனா என்றால் நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. விசாரணையின்போது சார்பு ஆய்வாளர் வந்தாரா என்றால் இரண்டு காவல் அதிகாரிகள் வந்தார்கள் அவர்கள் என்ன பொறுப்பில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அசா.1 கருப்பசாமி எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு சகலை ஆவார். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு அசா.1 எனது உறவினர் என்ற காரணத்தினால் அதனை மாற்றி சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**